15—

சிப்காட் தொழிற்பூங்கா

***52691—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, ஈக்காடு ஊராட்சி, தாமரைப்பாக்கத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈக்காடு ஊராட்சி, தாமரைப்பாக்கத்தில் தனியார் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.

திரு. M.S.R. ராஜவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர், குடிமராமத்து நாயகன், சேலத்து சிங்கம், சிலுவம்பாளையத்தின் செல்லப்பிள்ளை, எங்கள் ஆருயிர் அண்ணன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். கழகத்திற்கும் ஆட்சிக்கும் உறுதுணையாக இருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு துணை முதலமைச்சர், தென் மண்டலத்தினுடைய தளபதி, எங்கள் ஆருயிர் அண்ணன், ஜல்லிக்கட்டு நாயகன்,

2021 பிப்ரவரி 5]

ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். இன்றையதினம் இந்த அவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10—40

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதே விதி 110—ன்கீழ் புனரமைப்பதற்கு ஆணையிட்டார்கள். இன்றையதினம் அந்தத் தொழிற்சாலையை புனரமைத்துக் கொடுத்தால், விருதுநகர் மாவட்டம் என்றைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்டையாக இருக்கும் என்பதை நான் இந்த நல்ல நேரத்திலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அந்தச் சிமெண்ட் தொழிற்சாலைக்குட்பட்ட 5,000 ஏக்கர் நிலத்திலே தொழிற்சாலைக்கு வேண்டுமென்கிற material *கிடைக்கின்றது. அந்தச் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, எடுத்துக் கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். சாத்தூர் சட்டமன்றத் தொகுதியானது, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொகுதி; அமைச்சராக இருந்து பணியாற்றிய தொகுதி. ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் கஷ்டப்படுகின்ற கூலித் தொழிலாளர்கள் வாழ்கின்ற தொகுதி. ஆகவே, அங்கே சிமெண்ட் தொழிற்சாலையை புனரமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் ஆலங்குளம்*

[2021 பிப்ரவரி 5

சிமெண்ட் தொழிற்சாலையை wet process–லிருந்து dry process system–க்கு விரிவாக்கம் செய்து, தொழிற்சாலையை மேம்படுத்த வேண்டுமென்று விதி 110–ன்கீழ் அறிவித்தியிருந்தார்கள். அதன்படி அந்தத் தொழிற்சாலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொழிற்சாலைக்கு limestone தான் raw material; ஆனால், அந்தப் பகுதியில் மிக மிகக் குறைவாகக் கிடைக்கிறது. Limestone–ன் தரமும் (quality) சிறிது குறைந்ததன் காரணமாக ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மேற்படி விவரத்தை வலியுறுத்தி நாங்கள் கொண்டு சென்றிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதை மறுஆய்வு (re–examine) செய்து தொழிற்சாலையை மேம்படுத்தும் வழியை மேற்கொள்ளலாம் என்பதைக் குறிப்பிட்டார்கள். மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மீண்டும் ஒருமுறை அந்தத் தொழிற்சாலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொழிற்சாலையை விரிவாக்கம் செய்து, அங்கு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆய்வு அறிக்கையிலே, raw material ஆன limestone மிக மிகக் குறைவாகவும் தரமில்லாததாகவும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு இருப்பதன் காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு சென்று, ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். குடிமராமத்து நாயகன், காவேரியை மீட்டெடுத்த காவேரிக் காப்பாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதியிலுள்ள என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை

2021 பிப்ரவரி 5]

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சர்க்கரை ஆலை இப்போது இயக்கப்படாமல் உள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள ஒரே தொழிற்சாலை இந்த என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை. மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து விவசாயிகளின் நலன் கருதி, இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் உள்ள* N.P.K.R. Ramasamy Co–operative Sugar Factory *10, 15 ஆண்டுகளுக்கு முன்பே விரிவாக்கம் செய்யப்பட்டு, அதன் அரவைத்திறன் ஒரு நாளைக்கு 2500 டன்னாக அதிகரிக்கப்பட்டது. அரவைத்திறன் கூட்டப்பட்டபோதிலும் அந்தப் பகுதியில் மொத்த வேளாண் பெருமக்களுடைய கரும்பு உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. தற்சமயம்கூட அங்கே 20,000 டன்தான் கரும்பு வைத்திருக்கிறார்கள். சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலைக்கு* diversion *கொடுத்து அங்கு கரும்பு அரவை செய்யப்படுகிறது. அரவைத் திறனுக்குண்டான கரும்பு உற்பத்தியை வேளாண் பெருங்குடி மக்கள் செய்யாததன் காரணமாக, தொடர்ந்து 3 ஆண்டுகளாக அந்தச் சர்க்கரை ஆலை மூடப்பட்டிருக்கிறது. அந்தச் சர்க்கரை ஆலையில் கரும்பை அரைத்து சர்க்கரை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் ஒரு கிலோ சர்க்கரை உற்பத்திக்கு 120 ரூபாய்* cost *ஆகிறது. ஆனால், மார்க்கெட்டில் 19 ரூபாய்க்குத்தான் ஒரு கிலோ சர்க்கரை விற்கப்படுகிறது. அதனை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நன்கறிவார்கள். அங்கே வேளாண் பெருங்குடி மக்களால் கரும்பு உற்பத்தி அதிகமாக செய்யப்பட்டால், அதாவது, 5,000, 6,000 ஏக்கருக்கும் கூடுதலாக கரும்பு நடவு செய்யப்பட்டால், வருடத்திற்கு ஒரு இலட்சம் டன்னுக்கு மேல் கரும்பு அரைப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொண்டால், நிச்சயமாக மீண்டும் ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்த என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையை தொடர்ந்து இயக்குவதற்குண்டான*

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இருக்கிற கரும்பு உற்பத்தியாளர்களிடம் வலியுறுத்திச் சொல்லி, கரும்பு உற்பத்தியை அதிகரித்தால், N.P.K.R.R. *சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தன் அண்ணன் மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எட்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பாக, தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் கொண்டு வருவேன் என்றும் அதற்காக ஏறக்குறைய 1,600–க்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்கள். எட்டு ஆண்டுக் காலமாக அந்தப் பணி நடைபெற்று, தற்போது 1,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளது.*

ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்திய அளவில் வழங்கப்படுகின்ற மொத்த விருதுகளில் மூன்றில் இரண்டு பங்கு விருதுகளைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் தமிழக அரசு சிறந்து விளங்குகிறது என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவு 2023–ல் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழும் என்பதாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலுள்ள

2021 பிப்ரவரி 5]

மக்கள் எப்போதுமே பெங்களூரு அல்லது கோயம்புத்தூர் அல்லது திருப்பூருக்குத்தான் வேலைக்குச் செல்கிற நிலை இருக்கிறது. எங்கள் மாவட்டம் மிகவும் வறட்சியில் உள்ள மாவட்டம். சிப்காட் அமைக்கும் பணிக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளது. நில உரிமையாளர்கள் ஒன்றேகால் ஏக்கர் நிலம் மட்டும் கொடுக்காமல் இருந்தார்கள். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாகப் பேசி அவர்களிடமும் கையெழுத்து வாங்கி கொடுக்கப்பட்டுவிட்டது. எனவே, உடனடியாக ஒரு வார காலத்திற்குள்ளாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சிப்காட் அமைக்கும் பணியைத் தொடங்க வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தருமபுரியில் சிப்காட் தொழிற்பேட்டை அறிவிக்கப்பட்டு மொத்தம் 1,733 ஏக்கரில் அமையவிருக்கிறது. அதில் அரசு புறம்போக்கு நிலம் கிட்டத்தட்ட 993 ஏக்கர் இருக்கிறது. மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஏறக்குறைய ஒன்றரை ஏக்கரில் வழி அமைப்பதில் பிரச்சினை இருக்கிறது. சென்று வருவதற்கான வழிக்குக் கிட்டத்தட்ட 9 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதில், ஏறக்குறைய 7 ஏக்கருக்குமேல்* private negotiation *செய்து கையகப்படுத்திவிட்டோம். ஏறக்குறைய ஒரு ஏக்கருக்குமேல் மட்டும் வழிக்காக நிலம் வேண்டியிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேச்சுவார்த்தையின்மூலம் இதை முடித்துத் தந்த விவரம்* DRO *மூலமாக எங்களுக்கு வரப்பெற்று விட்டது. மத்திய அரசினுடைய* Environmental Clearance *வேண்டும்; அதற்குண்டான கோப்புகளை நாங்கள் சிப்காட் மூலமாக தயார் செய்து அனுப்பிவிட்டோம். தொழில் தொடங்க ஏற்புடைய சாதகமான அடுத்த இடம் தருமபுரி மாவட்டத்தின் சிப்காட் தொழிற்பேட்டை என்பதை மீண்டும் ஒருமுறை குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். காரணம் என்னவென்று கேட்டால், ஓசூர் சிப்காட் தொழிற்பேட்டை* full–*ஆகி அங்கு* Industries *எல்லாம் நிறைய வந்துவிட்டன. பர்கூர் சிப்காட் தொழிற்பேட்டையிலும்*

Industries நிறைந்து போய்விட்டன. அடுத்து, தருமபுரியை நோக்கித்தான் தொழிற்பேட்டைகள் வருவதற்குண்டான வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால், பெங்களூருக்கு அடுத்து ஓசூர், ஓசூருக்கு அடுத்து பர்கூர், பர்கூருக்கு அடுத்து தருமபுரி. தருமபுரிக்குத்தான் அடுத்து வர வாய்ப்பிருக்கிறது. Industries Department–ன் Secretary–ம் அதற்குத் தயாராகயிருக்கிறார்கள். Environmental Clearance–ஐ பெறுவதற்கான கோப்பை அனுப்பிவிட்டால்கூட, நாம் இந்தத் தொழிற்பேட்டையை ஆரம்பித்துவிடலாம் என்ற முடிவில் இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் நிச்சயமாக அந்தத் தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்குண்டான நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

16—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***61058—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவாலான பணிகளில் சாதனை படைப்பவர்களைப் பாராட்டுகிறபோது சிக்ஸர் அடித்துவிட்டார்; சிக்ஸர், சிக்ஸராக அடிக்கிறார் என்று பாராட்டுவது உண்டு. ஆனால், விரைவில் நடைபெறவிருக்கிற தேர்தல் களத்தில் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் opening batsmen–ஆக களமிறங்கி out ஆகாமல் not